<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 268/2021</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08–ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– 8(PW– 8)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கோமதி** | தொழில் | | **காவல் ஆய்வாளர்** |
| க/பெ. | : | **கருணாநிதி** | ஊர் | | **திருச்சி** |
| வயது | : | 47 | மாவட்டம் | | **திருச்சி** |

<u>08.10.2025</u>

<u>எதிரி ஆஜர்</u>.

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது திருச்சி பண்ணாட்டு விமான நிலையம் குடியுறிமை பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

2. கடந்த 10.08.2021 –ம் தேதி திருக்காட்டுப்பள்ளி காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது காவல் நிலைய குற்ற எண்.531/2021, ச/பி. 279, 337, இதச கீழ் பதிவு செய்யப்பட்டு முதல் கட்ட விசாரணை செய்து என் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

3. 10.08.2021 ஆம் தேதி மாலை 18.30 மணிக்கு விபத்தில் காயம்பட்ட பிரசண்ணா என்பவர் இறந்துவிட்டதாக தகவல் தெறிந்ததன் பேரில் வழக்கின் சட்டப்பிரிவை ச/பி. 279, 304(A) , இதச வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். (சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மறுநாள் காலை 08.30 மணிக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து இறந்த நபரான பிரசண்ணா என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன் **(பிரசண்ணாவின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ..8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**4)** விபத்தில் இறந்துபோன நபரின் சடலத்தை பிணக்கூராய்வு செய்வதற்காக காவலர் 1478 உதயசீலன் என்பவர் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். பின்பு சாட்சிகளை மீண்டும் விசாணை செய்து பட்டியல் சாட்சி 1 முதல் 3 க்கு மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற சாட்சிகள் புதிய சங்கதிகள் எதுவும் சொல்லாததால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவம் உண்மையன தெரியவந்து, இவ்வழக்கின் எதிரி இராஜா என்பவரை தேடி வந்த நிலையில், நீதிமன்ற முன் பிணை பெற்றுவிட்டதை தெரிந்துகொண்டேன்.

5) இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 49 CA 1769 TATA ACE வாகனத்தையும் TN 48 AY 4741 Hero இருசக்கர வாகனத்தையும் ஆய்வு செய்து அறிக்கை பெற வேண்டி 19.08.2021 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்து, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். (TN 49 CA 1769 TATA ACE வாகனம் மற்றும் TN 48 AY 4741 Hero இருசக்கர வாகனம் **ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆயவு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 18.09.2021** ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஜயகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்

6) அன்றையதினமே இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செல்வக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **(பிரசண்ணாவின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) பிரேத பரிசோதனை செய்வதற்க்கு வேண்டுகோள் கடிதம் எடுத்து சென்ற காவலரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 18.09.2021 ல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் திருக்காட்டுப்பள்ளியில் பணிக்கு சேர்ந்த தேதி 10.08.2021 சம்பவ தேதி 07.08.2021 முதல் நிலை காவலர் பூமிநாதன். 10.08.2021 ஆம் தேதி வழக்கு கோப்பை என்னிடம் ஒப்படைத்தார். இறந்து போன நபர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த போது அவருக்கு வலது புறத்தில் ஒரு கார் அதே திசை நோக்கி வந்ததாக முதல் தகவல் அறிக்கியைல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காரின் பதிவு எண் யாருடைய கார் என்று விசாரித்து தெறிந்துகொள்ளவில்லை. விபத்து நடந்ததாக சொல்லும் இடம் பூண்டி மாதாகோவிலுக்கு பக்கம் என்றால் சரியல்ல கோவில் செல்லும் ரோட்டுக்கு பக்கம்.

2) கல்லணை அணைக்கட்டு அங்கிருந்து மேற்கு திசையில் 10 கிலோமீட்டர் இருக்கும். பூண்டிமாதாகோவில் மற்றும் கல்லணை பிரசித்தி பெற்ற சுற்றுல தலம் என்பதால் அந்த ரோடு வழியாகதான் மக்கல் செல்வார்கள் என்றால் சரிதான். வெளிமாநிலங்களில் இருந்தும் மக்கள் வருவார்கள் என்றால் சரிதான் அந்த பகுதி பிஷியான பகுதி என்பதால் அசம்பாவிதத்தை தடுப்பதற்காக CC TV கேமராக்கல் பொறுத்தப்பட்டிருந்தன என்றால், அப்போது இல்லை. சமிபகாலத்தில் தான் பொறுத்தியுள்ளார்கள். அ.சா.2 முதல் அ.சா.4, அ.சா.1ன் உறவினர் என்றால் சரிதான்.

3) அ.சா.1 யை திருச்சி அரசு மருததுவமனையில் வைத்து 11.08.2021 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு விசாரணை செய்தேன். அ.சா.2, 3–யை சம்பவயிடத்தில் 11.08.2021 ஆம் தேதி பகல் 12.00 மணியளவில் விசாரித்தேன். அ.சா.4–யை

திருக்காட்டுப்பள்ளி Front line மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். மகஜர் சாட்சிகளை சம்பவயிடத்தில் 11.08.2021 ஆம் தேதி பகர் 12.00 வடி 01.30 மணியளவில் விசாரித்தேன். 18.09.2021 ஆம் தேதி காலை 10.30 மணியளவில் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவர் தீபிகாராணியை விசாரித்தேன். 18.09.2021 ஆம் தேதி பகல் 12.30 மணியளவில் திருச்சி Front line மருத்துவமனையில் வைத்து மருத்துவர் மருத்துவர் திரு.இராதகிருஷ்ணன் என்பவரை விசாரித்தேன். மதியம் 01.30 மணியளவில் திருச்சி மருத்துவமனையில் மருத்துவர் திரு.செல்வக்குமாரை விசாரித்தேன்.

4) பிரேத விசாரணை செய்த போது இருந்ததாக சொல்லும் பஞ்சாயத்தார்களை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேன என்றால் இல்லை. அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் செங்கமராஜபுரம், இலால்குடி. விபத்துக்குள்ளான நபரில் இரத்தம் படிந்த உடை எதுவையும் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. ஏற்படுத்திய கார் சென்றுவிட்டது என்றும் அந்த காரை கண்டுப்பிடிக்கா முடியாததால் அந்த வழியாக வந்த எதிரியின் வாகனம் விபத்து ஏற்படுத்தியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு விபத்து நஷ்ட ஈடு வாங்கிக்கொடுக்க வேண்டும் என்பதற்காக உள் நோக்கத்தோடு எதிரியை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) அந்த பகுதியில் காவல் நிலையம் மூலமும் மாதாகோவில் மூலமும் CCTV கேமாரக்கல் பொறுத்தப்பட்டுள்ளது என்றும் நான் அதனை கவனிக்க தவறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல, பொய்வழக்கு என்பதால் வேறுயாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றும் அதனால் அ.சா.1 ன் நெறிங்கிய உறவினர்களை விசாரித்து சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.5, 6 சம்பவயிடத்திற்கு அருகில் பெட்டிக்கடை வைத்துள்ளார்கள் என்றால் அங்கு வசிப்பவர்கள். நடாக்காத சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்க சொன்னதால் அ.சா.5, 6 பிறழ்சாட்சியா மாறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்றும் அதனால் தான் பஞ்சாயத்தார்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் தவறுதலாக புலண் விசாரணை செய்து எதிரிக்கு எதிராக குற்றஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.